# 2 பேதுரு
# ஓர் அறிமுகம்

பேதுருவின் முதல் நிருபத்தை ஒரு கவனத்துடன் படித்துவிட்டு, தொடர்ந்து இரண்டாவது நிருபத்தையும் படித்துப் பார்த்தால், இரண்டும் வேறுபட்ட பதிவேடுகள் என்பதை விளக்கப்படுத்தும், கிரேக்க மொழியை ஒதுக்கி வைத்துவிட்டு, நல்லதொரு ஆங்கில மொழிபெயர்ப்பை ஒருவர் வாசித்தால் இரண்டு புத்தகங்களிலும் அதிலுள்ள ஆர்வம், பொருளடக்கம், சொற்றொகுதி, சொல்லணி அமைப்பு, மற்றும் இறையியல் சம்பந்தப்பட்ட வார்த்தைகளில் உள்ள வித்தியாசத்தை கவனியாமல் விடமாட்டார். மிகப்பெரிய வித்தியாசத்திற்குக் காரணமாக அநேகரின் முடிவுப்படி இந்த இரண்டு நிருபங்களும் ஒரு ஆசிரியரால் எழுதப்பட்டிருக்க முடியாது என்கின்றனர். அப்போஸ்தலனாகிய பேதுரு முதல் நிருபத்தை எழுதியிருந்தால், அவர் இரண்டாவது நிருபத்தை எழுதியிருக்க வாய்ப்பில்லை, என்கிற சிந்தனைக்கு கொண்டு செல்கிறது.

2 பேதுருவை எழுதின ஆசிரியரைக் குறித்த கேள்வி வேறே கருத்துக்களை முகவுரையில் சுருக்கமாக்கக் கூடும். இந்நிருபத்தின் அநேக மாணாக்கர்கள் குறிப்பிடுகையில் வைராக்கியம் நிறைந்த ஒரு கூட்ட கிறிஸ்தவர்கள், மத விரோத போதனைகளை சந்தித்தபோது, 2 பேதுரு நிருபத்தை எழுதி அதற்கு அப்போஸ்தலரின் பெயரைச் சேர்த்துக் கொண்டனர், என்கின்றனர். பேதுருவின் பெயரைப் பயன்படுத்துவதன் மூலம், நிருபத்தின் உபதேசங்கள் கள்ளப்போதகர்களை வீழ்த்திடக் கூடும் என்று அவர்கள் நினைத்தனர், என்கின்றனர்.

## எழுத்தாளனைக் குறித்த கேள்விகளின் முக்கியத்துவம்

ஆங்கில வாசகர் இந்த இரண்டு பதிவேடுகளின் வேறுபாடுகளை தெளிவாகக் காணுகிற அதே வேளையில், கிரேக்க மொழியை ஒருவர் படிக்கும் போது இன்னும் மிகத் தெளிவாக அந்த வித்தியாசங்களைக் காணக்கூடும். ஒன்று பேதுரு புத்தகம் மிக நேர்த்தியான கிரேக்க உரைநடை வாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளது. இரண்டு பேதுரு புத்தகம் கவர்ச்சிகரமான வாக்கியங்களைக் கொண்டு, வழக்கத்துக்கு மாறான வார்த்தைகளையும், புரிந்து கொள்ள சிக்கலான வாக்கியங்களையும் கொண்டுள்ளது. சில இடங்களில் வாக்கியங்கள் ஒன்றொடொன்று கலந்து ஒரு சரியான முடிவை எட்டாதபடி செய்கிறது. எழுதப்பட்டதில் உள்ள இந்த வித்தியாசத்தினாலேயே (இரண்டு) நிருபங்கள் வித்தியாசப்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அநேகர் வருகின்றனர். புதிய ஏற்பாட்டில் எந்த புத்தகமும் அதை எழுதினவரைக் குறித்த அறைகூவல் விடப்படாத அளவுக்கு 2 பேதுரு புத்தகம் அவ்வளவு பலமாக விடப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டு வல்லுனர் ஒருவர், "எந்த ஒரு கத்தோலிக்கப் புத்தகத்திலோ, புதிய ஏற்பாட்டு புத்தகத்தில்

எந்த ஒன்றிலுமோ இந்த விஷயம் குறித்து, புத்தக ஆசிரியரைக் குறித்தும், அது எழுதப்பட்ட இடம் குறித்தும் ஆதிகிறிஸ்தவத்தில் 2 பேதுரு புத்தகத்தைக் காட்டிலும் அதிகமாக விவாதிக்கப்படவில்லை,"[1] என்று எழுதினார்.

அவைகளின் வேறுபாடுகள் இருந்தும் 2 பேதுரு, 1 பேதுரு புத்தகத்தைப் போலவே, எழுதின அப்போஸ்தலன் குறித்த அதே தெளிவான உரிமையைக் கோருகிறது. முதலாம் நிருபத்தைக் காட்டிலும், இரண்டாவது நிருபத்தை எழுதியவர், தனது மனதார உணர்வடைந்த நிலையில் தான் யார் மற்றும் கர்த்தருடன் தனக்கிருந்த தொடர்பு என்ன என்கிற தனது உரிமையைக் கேட்கும்படி அடித்தளமிட்டுள்ளார். பக்திக்குரிய மோசடி எனும் ரீதியில் இரண்டு நிருபங்களில் ஒன்றை காணும்படி கோரப்பட்டால், இரண்டாவதைவிட முதல் நிருபத்தை எழுதிய ஆசிரியரை மன்னிப்பது சுலபமாயிருக்கும். துவக்க வசனங்களில் பேதுரு தான் என்று குறிப்பிடப்படுவதைக் காட்டிலும், மற்றபடி சுவிசேஷங்களில் பேதுருவுக்கும் இயேசுவுக்குமிடையேயிருந்த மையம் வகித்த நிலைமைகள் குறித்து எதுவும் முதல் நிருபத்தில் குறிப்பிடப்படவில்லை. இரண்டு பேதுருவில் அப்படியில்லை.

2 பேதுருவில் விளக்கமாக பேதுரு தன்னைத் தான் "சீமோன் (அல்லது சிமியோன்) பேதுரு," என்று குறிப்பிடுகிறார், ஆனால் முதல் நிருபத்தில் அவர் தன்னை "பேதுரு" என்று மட்டும் குறிப்பிடுகிறார். இரண்டு நிருபங்களிலும் அதன் எழுத்தாளர் தன்னை "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்" என்று குறிப்பிடுகிறார்; ஆனால் இரண்டாவது நிருபத்தில், பவுலின் நடைக்கு ஒப்பாக, தன்னை "ஊழியக்காரன்" என்ற பதத்தில் சேர்த்திருக்கிறார். பிரதான இடம் வகித்த இயேசு மற்றும் பேதுருவின் இரண்டு நிகழ்ச்சிகள் 2 பேதுருவில் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாவது நிருபத்தில், அதன் எழுத்தாளர், முந்தின நிருபத்தைக் காட்டிலும் தனது நிருபத்தின் வாசகர்களுக்கு தன்னை உணரச் செய்யும் பொருட்டு இயேசு கிறிஸ்துவின் ஊழியகாலம் முழுவதும் தான் அவருடன் இருந்ததை முன் வைக்கிறார். அவரது தகவல் மூலம் அவர் தன் உரிமையை நிலை நாட்டினார். உள்ளான பிற சாட்சியங்கள் என்று நிருபத்திற்குச் சொன்னால் அது நியாயத்தீர்ப்பைக் குறித்த அடிப்படைத் தத்துவமே, 2 பேதுருவில் முதல் நிருபத்திற்கு ஒத்த எழுத்தாளரின் உரிமை கோரல் பேசப்படுகிறது.

இரண்டு பேதுருவின் எழுத்தாளனைக்குறித்த கேள்வி புதிய ஏற்பாட்டு வேத வல்லுனர்களாலும் கூட மற்றெல்லாவற்றையும் காட்டிலும் அதிகக் கவனத்தை ஈர்த்துள்ளது. "இரண்டு பேதுரு நிருபம் (இந்த) அப்போஸ்தலனால்தான் எழுதப்பட்டது, ஏனெனில் நிருபத்தின் துவக்க வசனம் அப்படித்தான் சொல்கிறது. இது ஒரு ஏவப்பட்ட பதிவேடு ஆனதால், அப்போஸ்தலனால்தான் அது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது உண்மைதான்" என்பது உரிமை கோர போதுமானதாய் இருப்பதில்லை. சிக்கலுக்குரிய புதிய ஏற்பாட்டு விரோத நபர்கள் அதை ஒரு சுற்றறிக்கை வாதமாகக் காண்பார்கள். ஒரு நபரிடம், "அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதினது தான் உண்மையாக இருக்க வேண்டும் என்ற உரிமை கோரலை நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டால், அவர் மறுமொழியாக, "ஏனெனில் அது ஏவப்பட்டு எழுதப்பட்டது" என்பார், அவர்

*பிரச்சனையாக்க விரும்பமாட்டார். "அது ஏவப்பட்டது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டால், அவர் மறுமொழியாக, "ஏனெனில் அது அப்போஸ்தலனாகிய பேதுருவால் எழுதப்பட்டது" என்பார். அவர் இந்த விஷயத்தைத் தவிர்க்க விரும்புகிறார். "இது ஏவப்பட்டது என்று எப்படி உங்களுக்குத் தெரியும்"? என்று கேட்கும் போது, "ஏனெனில் அது அப்போஸ்தலன் பேதுருவினால் எழுதப்பட்டது" என்று பதிலளிக்கிறார். முழு பிரச்சனையென்னவெனில், துவக்கவசனத்தில் கோரப்படும் உரிமை உண்மையா இல்லையா என்பதுதான். அப்படி உண்மையாக இருக்குமானால், நிருபம் தேவனால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டது என்பது பலமான ஆதாரமாகும் மற்றும் கர்த்தருடைய சபையை வழிகாட்ட தகுதியானதாக இருக்கிறது. துவக்கத்தில் உள்ள உரிமைகோரல் உண்மையில்லையென்றால், புதிய ஏற்பாட்டு வல்லுனர் நிருபத்தை உண்மை யென்றும், சபைக்கு அதிகாரம் செலுத்தக் கூடியதுமாக ஏற்றுக்கொள்ள விரும்பினால், அவர் சில கவர்ச்சிமிக்க விளக்கங்களை ஏவப்பட்டதற்கும், அதிகாரத்துக்கும், சத்தியத்திற்கும் அளிக்க வேண்டும். இந்தக் காரணங்களினால், 2 பேதுரு நிருபத்தை எழுதிய ஆசிரியரைக் குறித்த கேள்வி சிக்கலான ஒன்று.*

## பேதுரு எழுதினார் என்பதற்கு எதிரான விவாதங்கள்

*இயேசுவின் அந்த அப்போஸ்தலனுடைய பெயரில் 2 பேதுரு நிருபம் எழுதப்பட்டது என்ற கருத்தை மார்க்க எதிர்ப்பாளர்களால் புறந்தள்ளப்படக் காரணிகளாயிருந்த சாட்சியங்களையும் விவாதங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்கள் நேர்மையற்றவர்கள் என்பதால் மார்க்க விரோதிகள் (உண்மையில் எழுத்தாளனின்) உரிமையை புறந்தள்ளுவதில்லை. தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற சாட்சியங்களைக் கொண்டு அவர்கள் வழிநடத்தப்படுகிறார்கள். வேறுபட்ட கருத்துடையவர்கள் சாட்சியங்களைக் கொண்டு அலசிப்பார்க்க வேண்டும்.*

*மார்க்க விரோதிகள் 1 மற்றும் 2 பேதுரு நிருபங்கள் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருக்க இயலாது என்று சொல்லத்துவங்குகின்றனர். விவாதம் தொடருகிறது, பேதுரு இரண்டில் ஒன்றை எழுதியிருந்தால், அவர் மற்றொன்றை எழுதவில்லை என்கின்றனர். தங்கள் கருத்துக்கு அடிப்படையாக அநேக காரணிகளை அவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். முதலாவதாக, இரண்டு நிருபங்களும் எழுதப்பட்டுள்ள சொல் இலக்கியநடை கணிசமாக மாறுபட்டுள்ளது. முதல் பேதுரு புத்தகம் நல்லதொரு கிரேக்க உரை நடையில் எழுதப்பட்டுள்ளது, இரண்டு பேதுரு அப்படியொன்றும் மோசமான கிரேக்க மொழியில் எழுதப்படவில்லை (அது மோசமான எனும் வார்த்தைக்குக் கொடுக்கும் விளக்கத்தைப் பொருத்தது), ஏனெனில் அது போலிப் பகட்டையுடையது, தாக்கத்தை ஏற்படுத்த வல்லது, மற்றும் ஆடம்பரமானது. "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் ..." (1:4), "நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்" (1:11), "பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும்" (1:19), மற்றும் "இவர்களோ பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போலத் தங்களுக்குத் தெரியாதவைகளை*

தூஷித்து" (2:12), போன்ற சொற்றொடர்கள் தடையின்றி வீழ்வுறு மொழியில் எழுதப்பட்டிருப்பது நிருபத்திற்கு சாட்சியம் என்று விளக்கப்படுத்துகிறது. எதிருவமையாக, முதலாம் பேதுரு அதிகமாக கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

கூடுதலாக, 2 பேதுருவில் சொல்லப்பட்டுள்ள பொருளடக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட காரியங்கள், முதல் நிருபத்திலிருந்து வித்தியாசப்படுகிறது. "நம்பிக்கை" என்பது 1 பேதுருவில், ஒரு வார்த்தையாக மற்றும் கருத்தாக, முக்கியத்துவம் வாய்ந்தது. 1 பேதுரு வாசகர்கள் உபத்திரவங்களும் பாடுகளும் வரும்போது நடந்து கொள்ள வேண்டிய விதத்தைச் சொல்லி, கடைசி நாட்களில் வெளிப்படவிருக்கிற தேவனுடைய மகிமையை விளக்கப்படுத்தி வாசகர்களுக்கு உதவுகிறது. கர்த்தர் மறுபடியும் வரும்போது, கிறிஸ்தவர்களின் மெய்நிலை உறுதிப்படுத்தப்படும், அவர்களை உபத்திரவப்படுத்துவோருக்கு நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. 2 பேதுருவிலே கர்த்தருடைய வருகையைக் குறித்து அமைதியாக இருக்கவில்லை, எழுத்தாளர் அந்தப் பாடத்தை அறிமுகப்படுத்தி, தனது வாசகர்களுக்கு மிக அதிகமான ஆறுதலையோ வாக்குறுதிகளையோ அளிப்பதற்காக இல்லாமல், கர்த்தர் ஏன் தமது வருகையைத் தாமதிக்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும்படி உதவுகிறார். "நம்பிக்கை" என்பது 1 பேதுரு புத்தகத்தின் திறவுகோல் என்று சொன்னால், 2 பேதுருவில், "அறிவு" என்பது திறவுகோல் வார்த்தையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 1 பேதுருவில் கணிசமான வலியுறுத்தல் சிலுவையைப் பற்றி கொடுக்கப்படுகிறது, மற்றும் உயிர்த்தெழுதல் பரமேறுதல், ஞானஸ்நானம், மற்றும் ஜெபம் போன்ற காரியங்களும் வலியுறுத்தப்படுகிறது. 2 பேதுருவில் இவைகள் இடம்பெறவில்லை.

2 பேதுருவில் அநேக தனிப்பட்ட மறைபொருள் குறிப்பிடப்படுகிறது, மதவாத விரோதிகள், அதன் ஆசிரியர் அவைகளை மேலோட்டமான தனித்துவ மறைபொருளாக தனது உரிமைக்கு ஒரு ஆதாரமாக காட்டுவதாக தங்கள் கருத்தில் உறுதியாக நிற்கின்றனர். அந்த ஆசிரியர் அப்போஸ்தலனாகிய பேதுரு என்று தனித்துவ மறை பொருளில் அடக்கியுள்ள சில காரியங்களாவன: (1) எழுத்தாளர் பேதுருவின் பெயரை பழங்கால வழக்கப்படி, பொதுவாக அழைக்கப்பட்ட சீமோன் என்பதற்குப் பதிலாக, சிமியோன் என்று பயன்படுத்துகிறார் (1:1).[2] (2) எழுத்தாளர் யோவான் 21:18, 19ல் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுவுக்கும் பேதுருவுக்குமிடையே நடந்த உரையாடலை குறிப்பிடுகிறார். அங்கே கர்த்தர் அவனுக்கு வரவிருந்த மரணத்தைக் குறித்து அப்போஸ்தலனிடம் சொன்னார் (1:14). (3) மறுரூபக் காட்சியில் நடந்த நிகழ்வுகளை ஆசிரியர் நினைவுகூருகிறார். 2 பேதுருவில் அவர், "அவருடைய மகத்துவ மகிமையைக்" குறித்தும், "பரிசுத்த பருவதத்தைக் குறித்தும் குறிப்பிட்டுப் பேசினார்" (1:16-18). (4) அவர் தமது முதலாம் நிருபத்தை மறைவாக குறிப்பிட்டு எழுதினார் (3:1). (5) புதிய ஏற்பாட்டிலேயே பவுலின் நிருபங்களைக் குறித்துப்பேசுகிற புற ஆதாரத்தைக் குறிப்பிட்டு இதன் ஆசிரியர் குறிப்பிடுகையில் பவுல் எழுதினவைகளில் "சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது" என்றார் (3:15, 16). பவுலின் நிருபங்களை குறிப்பிடுவது விசேஷ கவனத்திற்குப் பாத்திரமானது. மத எதிரிகள் தர்க்கித்து பேதுரு பவுலின் நிருபங்களில் பரிட்சயமாயிருக்கக் கூடும் என்பது வழக்கத்துக்கு மாறானது என்கின்றனர்; அப்படியிருந்திருக்குமானால், அவர்

*அவைகளை "மற்ற வேத வாக்கியங்கள்" என்ற வரிசையில் சேர்த்து பேசியிருக்க மாட்டார் (3:16) என்கின்றனர்.*

*2 பேதுருவுக்கும் யூதா புத்தகத்திற்குமிடையே தெளிவான இலக்கிய நடையில் தொடர்பு இருக்கிறது. அநேகர் 2 பேதுரு புத்தகம் ஆனால் இது அப்படியே தலைகீழ் மாற்றமுடையது என்பதற்குப் பதிலாக யூதாவை சார்புடையது என்று தர்க்கிக்கின்றனர். அது உண்மையானால், 2 பேதுரு புத்தகம் பின்னதாக வந்த மூல வாக்கியம், எனவே 60ம் ஆண்டு மத்தியில் அப்போஸ்தலனுடைய மரணத்துக்கு முன் எழுதப்பட்டிருக்க இயலாது. 2 பேதுருவுக்கும் யூதாவுக்குமிடையே இலக்கிய தொடர்பு இருப்பது சிக்கலானது. இந்த முகவுரையில் பிற்பாடு நாம் அந்தக் கேள்வியை அலசுவோம்.*

*1, 2 பேதுரு புத்தகங்கள் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தவர்களாக, சில புதிய ஏற்பாட்டு திருமறைசார் வல்லுனர்கள் புறம்பான, வரலாற்று ரீதியிலான (ஆதாரங்களை) மத சார்பற்ற மூலாதாரத்திலிருந்தும் ஆதிக் கிறிஸ்தவர்களிடமிருந்தும் நிருபத்தின் ஆசிரியர் குறித்த ஆதாரங்களைத் திரட்ட முடுக்கிவிடப்பட்டுள்ளனர். யூதா நிருபத்தைப் போலவே, 2 பேதுரு புத்தகத்தின் நோக்கம், சபைகளை தங்கள் போதகங்களால் படையெடுத்துத்தாக்குகிற கள்ளப் போதகர்களை அதிகளவில் கடிந்து கொண்டு அவர்களை அலட்சியப்படுத்துவதுதான். 2 பேதுருவில் குறிப்பிடப்படுகிற இந்த வகைப் போதகர்கள் இரண்டாம் நூற்றாண்டு வரை நன்கு அறியப்பட்ட ரீதியில் சபை காட்சியில் அவர்கள் தோன்றவில்லை. இப்படியிருப்பதால், 2 பேதுரு புத்தகம் பக்தியுள்ள சபை மனிதர்களால் எழுதப்பட்டு (சொல்லப்பட்டபடி) இந்த போதகர்களின் செல்வாக்கை அழிப்பதை நோக்கமாக கொள்ளப்பட்டது. தங்கள் சொந்தப் பெயரைக் தாங்கிவருகிற ஒரு நிருபத்திற்குள்ள மதிப்பைக் காட்டிலும் பேதுருவின் பெயரைத் தாங்கிவருகிற நிருபத்திற்கு அதிக கனம் இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். பகுத்தாய்ந்து பார்த்தால் 2 பேதுருவை எழுதின ஆசிரியரோ ஆசிரியர்களோ அப்போஸ்தலன் அங்கிருந்திருந்தால் அவர் எழுதியிருப்பார் என்று அவர்கள் நம்பினவைகளின் நோக்கமாக இருந்தது.*

*முதல் நிருபத்தை அப்போஸ்தலன் பேதுருதான் எழுதினார் என்பதற்கு கணிசமான சாட்சியங்கள் ஆதிசபை ஆசிரியர்களால் அளிக்கப்படுகிறது. இரண்டாம் நிருபத்திற்கு பேதுருவின் சம்பந்தம் இருப்பதற்கான சாட்சியம் மிகக் குறைவு. இரண்டையும் பேதுரு தான் எழுதினார் என்பதை சிலர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர் 2ம் நிருபத்தை எழுதினதைவிட 1ம் நிருபத்தை எழுதினார் என்பதற்கு ஆதாரம் வலுவாக உள்ளது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகையால், 1 பேதுரு புத்தகம் உண்மையில் அப்போஸ்தலனால் எழுதப்பட்டது, ஆனால் 2 பேதுரு வேறு யாராலோ எழுதப்பட்டது என்ற முடிவை அநேக மத விரோதிகள் நம்புகின்றனர்.*

*இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகளின் மூலக்கூறுகளை கண்டறிய கணிசமான அறிவு தேவை, அதினால் இரண்டு நிருபங்களின் எழுத்தாளனைக் குறித்த சாட்சியத்தை ஆராயக்கூடும். அந்தக்காரணத்தால், அப்படிப்பட்ட செய்திகளில் ஆர்வமுடையவர்களை வியாக்கியானத்துக்குச்*

செல்லும்படி கூறுகிறோம்.[3] இங்கே நமது நோக்கம் என்னவெனில் சில மத விரோதிகள் 1 பேதுரு அப்போஸ்தலனால் எழுதப்பட்டது ஏனெனில் அவருடைய பெயர் அங்கே குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இரண்டு பேதுருவில் அப்படிக் குறிப்பிடப்படவில்லை என்று அவர்கள் சொல்லுவது ஏன் என விளக்கப்படுத்துவதுதான். தர்க்கம் என்னவெனில் 1, 2 பேதுரு ஆகிய இரண்டும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருக்க இயலாது என்பதுதான். பிரசித்தமான கட்டுரைகளை திருமறை கருத்துக்களாக ஆசிரியர்கள் எழுதுவதுண்டு, அவைகள் சில வேளைகளில் செய்தித்தாள்களிலோ அல்லது அன்றாட நிகழ்வுகளைக் குறிப்பிடும் பத்திரிக்கைகளிலோ எழுதப்பட மதவிரோதர்களிடமிருந்து மத சுதந்திரம் எனும் பெயரில் தகவல்களை சேகரிக்க அவர்களை சார்ந்திருக்கின்றனர். அதினாலே, தலைப்புச் செய்திகளில் நன்கு பிரசித்தம் பெற்ற அச்சகங்கள் 2 பேதுரு நிருபம் அப்போஸ்தலனாகிய பேதுருவால் எழுதப்படவில்லை என்ற செய்தியை தாங்கி வருகிறது. திருமறையை கற்றுத் தேற தங்கள் வாழ்நாளை செலவழிக்க வேண்டிய கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட செய்திகள் ஏன் வெளியிடப்படுகின்றன என்று ஆச்சரியப்படுவதை எதிர்பார்ப்பதுதான்.

## பேதுரு எழுதியிருப்பார் என்பதைக் குறித்த விவாதங்கள்

2 பேதுரு நிருபத்தை பேதுரு தான் எழுதினாரா என்ற ஒவ்வொரு ஆட்சேபனைக்கும் வேறு வல்லுனர்கள் பதில் அளித்துக் கொண்டுள்ளனர். உதாரணமாக, இரண்டு - ஆசிரியர் கோட்பாட்டைக் காட்டிலும் எழுத்து நடைகளில் காணும் இரண்டு நிருபங்களின் வித்தியாசங்களை வேறு அடிப்படையில் ஆராயலாமா? இந்த இரண்டு நிருபங்களின் மாணாக்கர்கள் இந்த இரண்டு நிருபங்களின் ஆசிரியர் அப்போஸ்தலன் தான் என்ற உரிமை கோரலுக்குரிய கனத்தை செலுத்த வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, வார்த்தை நடை மற்றும் விதங்களில் காணும் வித்தியாசங்கள் கணிசமான தேவைகளினிமித்தம் இரண்டு நிருபங்களிலும் பயன்படுத்தியிருக்கக் கூடும். இருந்தாலும், அது வித்தியாசங்களுக்கான அளவுகோலுக்கு போதுமான ஆதாரமல்ல. இன்னும் அதிகமான குறிப்பிடத்தக்க கணிசமான ஆதாரம் ஐந்தாம் நூற்றாண்டில் ஜெரோம் என்பவரால் கொடுக்கப்பட்டது. ஜெரோம் ஒரு கவனமுடைய நிபுணர். மிகப் பெரிய அளவில் அவருடைய பணி இலத்தீன் வல்கேட் பதிப்பகத்தில், ஒரு மொழி பெயர்ப்பாக ஏறக்குறைய ஒரு ஆயிரம் வருடம் பிரதானமாக ஐரோப்பாவில் உச்சக்கட்ட நிலையை அடைந்திருக்கிறது. 1, 2 பேதுரு நிருபங்களில் காணும் இலக்கிய நடை வித்தியாசங்கள் பேதுரு தனக்கு உதவியாகப் பயன்படுத்தின வித்தியாசப்பட்ட வேதபாரகர்களால் ஏற்பட்டதாக இருக்கலாம் என்று ஆலோசனையாகக் குறிப்பிட்டார்.

ஒரு வேதபாரகன், சொல்வதை எழுதும்படி அமர்த்தப்பட்ட ஒருவன், ஒரு காரியதரிசியைக் காட்டிலும் மேலாக வார்த்தைக்கு வார்த்தை சொல்லச் சொல்ல எழுதுபவன். அவன் தான் எழுதுகின்ற நபருக்கு சொற்றொடரை அமைப்பதிலும் வார்த்தைகளை சரியாக தெரிவு செய்வதிலும் உதவி செய்பவனாயிருந்தான். நிருபத்தின் முடிவில் சீலா என்று 1 பேதுரு

புத்தகத்தில் அப்போஸ்தலன் எழுதியிருப்பதால், தனக்கு எழுதுவதில் உதவிய வேதபாரகனைக் குறிப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது (1 பேதுரு 5:12). பவுல் தனக்கு வழக்கமாக ஒரு வேதபாரகனை அமர்த்திக் கொள்வது பழக்கமாக இருந்துள்ளது. ரோமர் நிருபத்தில், வேதபாரகனாக இருந்தவன், ஒரு கிறிஸ்தவன் பெயர் தெர்து, பவுலின் நிருபத்தில், தனது சொந்த விளக்கவுரையை உட்சொருகினான் (ரோமர் 16:22). பேதுரு தனது 1 பேதுரு புத்தகத்தை எழுதிய போது சீலாவை தனது வேதபாரகனாக வைத்திருந்தால் ஆனால் இரண்டாவது நிருபத்தை எழுதினபோது வேறு யாரையோ வைத்து எழுதியிருந்தால், உரைநடையிலும் எழுதும் விதத்திலும் கணிசமான வித்தியாசங்கள் ஏற்பட இது காரணமாயிருந்திருக்கக் கூடும்.

ஜாக்கிரதையாய் வாசிக்கிற ஒரு வாசகர், 1 பேதுருவையும் 2 பேதுருவையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது வித்தியாசமான கரிசனையைக் காணலாம், ஆனால் அதை விளக்கப்படுத்துவது மிகக் கடினமான காரியமல்ல. இரண்டு நிருபங்களும் இரண்டு வித்தியாசப்பட்ட நோக்கங்களுக்காக எழுதப்பட்டிருந்தன. விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தினிமித்தம் பாடுபட்டுக்கொண்டிருக்கையில் விசுவாசிகளுக்கென எழுதும்போது, கிறிஸ்துவின் பாடுகளை குறிப்பிடுவதும் கிறிஸ்து மகிமையிலே வெளிப்படும்போது கிடைக்கப்போகும் மகத்துவ மகிமையையும் குறிப்பிடுவது பேதுருவுக்கு அவசியமாகக் கண்டது. மறுபுறம் பார்த்தால், கள்ளப் போதகர்களின் ஒழுங்கற்ற வாழ்க்கையும் தீவிரவாத உபதேசங்களும் கிறிஸ்துவையும் அவருடைய நாமத்தைத் தரித்துகொண்ட அவரது சமுதாயத்தையும் தவறோடு ஒத்துப்போக செய்த ஜனங்களுக்கெதிராக, புத்தகத்தின் ஆசிரியருக்கு வித்தியாசமான கருவிகளும் சூழ்நிலைக்கேற்ற திறமையும் தேவைப்பட்டது. இரண்டு பேதுரு புத்தகத்தின் நோக்கம் கொடுக்கப்பட்டுள்ளதைக் கண்ணுறும் போது, அதன் ஆசிரியர் சிலுவையைக் குறித்து ஒன்றுங்குறிப்பிடாமல், மனித அவதாரம், ஞானஸ்நானம், ஜெபம், அல்லது கிறிஸ்துவின் மீட்பின் பணி குறித்து எதுவும் குறிப்பிடாமல் எழுதியிருப்பது ஆச்சரியப்படாமலிருக்கச் செய்வதில்லை. பாடக் கருத்தில் தோன்றும் வித்தியாசம் இரண்டு புத்தகங்களுக்கும் இடையே நிலவும்போது அவைகள் இரண்டும் வேறுபட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கக் கூடும் என்ற முடிவு கோரப்படுவதில்லை.

பேதுருவே இந்த நிருபத்தின் ஆசிரியர் என்பதை மறுப்பதற்கான பெலவீனமான உரிமை கோருதல், ஒருவேளை இந்த நிருபத்தில் தனிப்பட்டவர்களைக் குறிப்பிடுவதன் அடிப்படையில் இருக்கலாம். தன்னுடைய அனுபவங்களைக் குறிப்பிடாமல் விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் எழுதியிருக்கமாட்டார் என்பதை வலியுறுத்தி, பேதுருவின் ஆசிரியத்துவத்தைப்பற்றிச் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர் என்பது கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. முதலாம் நிருபத்துக்கு அவருடைய கர்த்தருடனான உறவுமுறை வலிமையையும் ஆர்வத்தையும் கூட்டியிருக்கக் கூடும். கர்த்தருடனான தனிப்பட்ட நினைவுகூருதல்கள் சிலவற்றையே கொண்டிருப்பதால், பேதுருவே 1 பேதுருவின் ஆசிரியர் என்பதை சிலர் மறுக்கும் வேளையில், 2 பேதுருவில் அநேகம் உள்ளதால், மற்றவர்கள் பேதுரு அதன் ஆசிரியர் என்பதை மறுப்பது என்பது நகைப்புக்குரியதாயிருக்கிறது.

ஒருவர் இரண்டையும் கொண்டிருக்க முடியாது. சுவிசேஷங்களில் காட்டப்பட்டிருக்கும் பேதுரு, தான் ஞாபகப்படுத்திக் கொண்ட நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டார் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிதுதான். ஆசிரியர் மறுரூபமான நிகழ்ச்சிகளைப் (1:17, 18) போன்றவற்றைக் குறிப்பிடுவதால் 2 பேதுரு நிருபத்தின் ஆசிரியர் அவரல்ல என்று மறுப்பது விவேகமான காரியமல்ல.

பவுலின் நிருபங்களுடன் குறிப்பிடும்போது, அவைகளை மற்றவேத வாக்கியங்களுடன் அடையாளப்படுத்தியும் பேதுரு ஒரு அதிரடி விளக்கத்தைக் கொடுத்தார் (3:16). எப்படியிருப்பினும், பேதுரு மற்றும் பவுல் ஆகிய இருவருமே 60ம் ஆண்டின் மத்தியில் ரோமில் இருந்துள்ளனர் என்றும் அடுத்த பத்து ஆண்டுகளின் முடிவில் அவர்கள் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள் என்றும் காணப்படுகிறது. இரண்டு அப்போஸ்தலர்கள் ஒரே பட்டணத்தில் சிறைவைக்கப்பட்டிருந்தும் ஒருவரையொருவர் அங்கிருப்பதை அறியாதிருந்தனர் என்பது நம்ப முடியாத ஒன்று. பேதுரு ரோமர் நிருபத்தை வாசித்திருப்பார். அநேகமாக பவுல் எழுதின மற்ற நிருபங்களையும் அவர் அறிந்திருக்க வேண்டும். 2 பேதுருவின் நிருபம் 1 பேதுருவுக்கு பின்னதாக எழுதப்பட்டிருக்குமானால், பவுலின் நிருபங்களை ஒப்பிட்டு அதன் ஆசிரியர் எழுதியிருப்பது புரிந்து கொள்ளத்தக்கது.

பவுலைப் போலவே பேதுருவும், அப்போஸ்தலர்களின் ஜீவியத்தில் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலையும் ஊழியத்தையும் அறிந்திருந்தார். ஆனால், புதிய ஏற்பாட்டு சபை குறித்த சட்டதிட்ட தொகுப்பு முதல் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை அமலுக்கு வரவில்லை, பேதுரு அந்த சட்டதிட்ட தொகுப்பைக் குறித்து பேசவில்லை. அவர் பவுலின் நிருபங்களை சிலர் மற்ற வேதவசனங்களை புரட்டுகிறது போல புரட்டிப் போட்டார்கள் என்று மட்டும் சொன்னார். அவை அது அப்போஸ்தலர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த மரியாதையைக் குறித்த ஒரு வாக்கியமாகவே காணப்படுகிறது.

2 பேதுருவில் பேசப்படும் கள்ளப் போதகர்கள் இரண்டாம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை தோன்றவில்லை என்பதை உறுதிப்படுத்தக் கூடுமானால், பிறகு 2 பேதுரு புத்தகம் அப்போஸ்தலனால் எழுதப்படவில்லை என்பது ஒரு தீர்மானிக்கப்பட்ட விவாதமே. இருப்பினும், அப்படியொரு சாட்சியம் மூலம் உரிமைகோரல் குறைவுள்ளது. கி. பி. 40 லிருந்து 100 வரை நிகழ்ந்த சபையின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட உபதேசக் கொள்கைகள் குறித்து வரலாற்று ஆசிரியர்கள் மிகச் சிறிதளவே அறிந்திருந்தனர். மேலும், 2 பேதுருவில் பேசப்படும் கள்ளப் போதகர்களைக் குறித்த விளக்கம் அவர்கள் சரியாக என்ன போதித்தார்கள் என்பது குறித்து சிறிதளவு தகவல்கள் மட்டுமே காணுகிறது. 2 பேதுருவுக்கும் யூதாவுக்குமிடையிலான சொல்நடைப்பகுதியைக்கூட தீர்மானிப்பது கடினமானது. சமீபகால நிபுணர்கள் யூதா முன்னதாக எழுதப்பட்டது, தொடர்ந்து 2 பேதுரு எழுதப்பட்டது என்று தர்க்கிக்கிற போக்கில் பேசுகின்றனர். பழைய நிபுணர்கள் 2 பேதுரு தான் முன்பு எழுதப்பட்டது என்று தர்க்கிக்கின்றனர். 2 பேதுரு புத்தகம் எழுதப்பட்ட வருடத்தை ஒருவர் குறிப்பிட முற்படும் போது, அவர் எதிர் கொண்ட கள்ளப்போதகர்களை அடையாளப்படுத்தியோ அல்லது 2 பேதுருவுக்கும் யூதாவுக்குமிடையிலான இலக்கிய நடையை பகுத்தாய்ந்து அதன்

தொடர்பை வெளிப்படுத்திப் பேசினாலோ, கொடுக்கப்பட்டுள்ள செய்தி முடிவற்றதாயிருக்கிறது.

கிறிஸ்தவ சட்டதிட்ட தொகுப்பில் 2 பேதுரு புத்தகம், புதிய ஏற்பாட்டு பதிவேடுகளில் மிக அதிகமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளில் இப்புத்தகம் இடம் பெறவில்லை என்று காணும் போது அது மனதுக்கு கடினமானது என்பது உண்மையே. நான்காம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில், சபையின் வரலாற்று ஆசிரியர் யூஸிபியஸ் 2 பேதுரு புத்தகம் சபையில் அங்கீகரிக்கப்பட்ட உண்மையான புத்தகம் தானா என்ற கேள்விகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.[4] எப்படியிருப்பினும் அதன் தாமதமான ஏற்புக்குக் காரணமாக நியாயமான, தர்க்கரீதியான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் அநேக போலியான புத்தகங்கள் விசுவாசிகளுக்குள்ளே விநியோகிக்கப்பட்டன. அவைகளில் எண்ணிறைந்த புத்தகங்கள் தப்பிப்பிழைத்திருந்தன. அநேக போலியான புத்தகங்கள் பேதுருவின் பெயரைக் கொண்டுள்ளன என்பது உண்மையை; இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பேதுருவின் வெளிப்படுத்தல் என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது இதற்கு ஒரு உதாரணம். அப்போஸ்தலனால் எழுதப்பட்டதாகக் குறிப்பிட்டு வெளியிடப்பட்ட பதிவேடுகளைக் கொண்டு உரிமை கோரலை முன்வைத்ததைக் குறித்து சபை எச்சரிக்கையாயிருந்தது.[5] பேதுரு எழுதினதாகச் சொல்லப்பட்ட மற்ற எழுத்துக்கள் புறக்கணிக்கப்பட்டது போல், 2 பேதுரு ஆதிமூலக்கூறுகளில் பெரும்பாலும் மேற்கோள் காட்டப்படவில்லை, அது விவாதிக்கப்பட்டு புறந்தள்ளப் படவுமில்லை.

சாட்சியம் ஒழுங்குபடுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட போது, ஒரு தூய்மையான வரலாற்று காட்சியிலிருந்து, உள்ளும் புறமுமான சாட்சியம் முடிவற்றதாயிருக்கிறது. எப்படியிருப்பினும், 2 பேதுருவின் புத்தகம் அப்போஸ்தலனால் தான் எழுதப்பட்டது என்பதை நிராகரிக்க பலமான காரணம் எதுவுமில்லை, அவர் இயேசுவோடு கூட அவரது ஊழியத்தில் கூடச் சென்றவர். இந்த நிருபம் பேதுருவினுடையதுதான் என்பதற்கு இரண்டு உண்மையான சாராம்ஸங்கள் உண்டு. முதலாவதாக, நிருபத்தி ன் துவக்கத்தில் திறவுகோல் வார்த்தையாக பேதுரு கொடுத்த சாட்சியத்தில் இயேசுவோடு தான் இருந்து கண்ட நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுசொன்னது, நிருபம் உறுதியான காரணங்களால் (அவருடையது என) ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. இரண்டாவதாக, ஆதிசபை 2 பேதுருவை அன்போடு ஏற்றுக் கொண்டு அதை புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதி என்பதை கிறிஸ்தவர்களின் ஒட்டுமொத்தத்தீர்ப்பு எனும் அடிப்படையில் நிருபம் (அவருடையது என்பது) உண்மையென்றுமுடிவுக்கு வந்தது.

2 பேதுரு புத்தகம் புதிய ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்டிருந்தால் அது அப்போஸ்தலனால் எழுதப்பட்டதல்ல என்ற தவறான தகவலுக்கு அடிப்படையாயிருப்பது என்ன? அது அப்படியொன்றும் பெரிய வித்தியாசங்களை ஏற்படுத்துவதில்லை என்கின்றனர் சிலர். அவர்களின் விவாதம் பின்வருமாறு: நூற்றாண்டுகளினூடே புதிய ஏற்பாட்டில் 2 பேதுரு புத்தகம் பிரயோஜனமுள்ள ஒன்றாகக் காணப்பட்டது. மேலும், நிருபத்தின் ஆசிரியர்கள் பேதுருவின் பெயரை பயன்படுத்துவதில் அவர்கள் எந்தவித நேர்மையற்ற செயலையும் செய்யவில்லை. அவர்கள்

சபையின் நலனில் அக்கறையுள்ளவர்களாயிருந்தனர். அதற்கு மேலும் அவர்கள் யதார்த்தமாய் நம்பின காரியம் ஒருவேளை பேதுரு அங்கே இருந்திருப்பாரானால் அவர் கள்ளப் போதகர்களுக்கு எதிராக தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தியிருப்பார் என்கின்றனர். அவர்கள் பேதுருவுக்கு முற்றிலும் முகவர்களாயிருப்பதாக நம்பினார்கள். ஆகையால், நிருபத்திற்கு பேதுருவின் பெயர்வைப்பதில் எந்த வித தீங்கு ஏற்பட்டால், அது முக்கியத்துவமற்றதாகவே இருந்திருக்கக் கூடும்.

இப்படி விவாதிக்கிறவர்கள் பூர்வகால எழுத்தாளர்களின் உண்மையை கணிக்கும் போது ஒரு தயவைக் காட்டுகிறவர்களாயிருக்கிறார்கள், அவர்கள் தற்கால காரியங்களைப் பொறுத்துக் கொள்வதில்லை. ஒரு பூர்வீக எழுத்தாளர் அறிந்தே பேதுருவின் பெயரை இந்த நிருபத்திற்கு வைத்து தனது சுய வாக்கு அறிக்கைகளை வெளியிட்டு தன்னை அப்போஸ்தலன் என்று கூறி தன்னையே சார்ந்திருப்பாரானால், எவ்விதத்திலும் அவரை நேர்மையானவர் என்றோ உண்மையுள்ளவரென்றோ முடிவு செய்வது மிகக் கடினம். ஒரு நேர்மையற்றவரின் உரிமை கோரலை அடிப்படையாகக் கொண்டு நம்பி, இந்த தகுதிகளை குறிப்பாய்ச் சொல்லி 2 பேதுருவை அன்பாய் ஏற்றுக் கொள்ளும் ஒரு கர்த்தரைப் பின்பற்றுவதென்பது முரண்படாத செயலாக இருக்க முடியாது. 2 பேதுரு அப்போஸ்தலனால் எழுதப்படாததாயிருந்திருக்குமானால், அது ஒரு வஞ்சகமான உரிமை கோரலாக இருக்கக் கூடும். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ கோட்பாட்டுத் தொகுப்பை சகித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நிருபம் அப்போஸ்தலனால் எழுதப்படவில்லை என்று சொல்லுவது அப்படிச் சொல்லும் மார்க்க எதிர்ப்பாளர்கள் உண்மைக்கு குறைவானவர்கள்; ஆகிலும் அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், ஏவப்பட்டதும், கிறிஸ்துவின் சபையை கட்டுப்படுத்தும் உபதேசங்களை கொண்டுள்ளது.

தயக்கமின்றி, 2 பேதுரு அப்போஸ்தலனால் எழுதப்பட்டது என்று ஏற்றுக் கொள்கிறோம். மேலும், அவர் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால் எழுதினார் என்று விசுவாசிக்கிறோம். ஒரு கனிசமான அளவுக்கு இதை நாம் ஒரு விசுவாச அறிக்கையாக ஏற்றுக் கொள்கிறோம். பதிவேடு ஜாக்கிரதையான ஆலோசனையை கோருகிறது என்பதால் எழுதப்பட்ட ஆசிரியரைக் குறித்த கேள்வி எழும்புகிறது. எப்படியிருப்பினும், புத்தகத்தின் துவக்க வசனத்தில் சொல்லப்பட்டுள்ள ஆக்கியோனின் குறிப்பு உரிமை கோரலுக்கான விளக்கமளிப்பதால் அதை புறந்தள்ள வேண்டுவதில்லை. நிருபம் போலியானது என்றும் எனவே புதிய ஏற்பாட்டிலிருந்து தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கூறுவோரையும் ஒரு குறிப்பிட்ட ரீதியில் மதிக்கிறோம், என்றாலும் அது போலியானது என்று கூறுவோரின் இசைவையும் சுயமான சாட்சியை மன்னித்து எழுதியவரின் வஞ்சகச் செயலையும் மன்னிக்க கூடியவர்களைக் காணுவது மிகக் கடினம்.

## செய்தியைப் பெற்றுக் கொள்வோம், எழுதிய வருடம், மற்றும் எழுதப்பட்ட இடம்

2 பேதுரு நிருபத்தின் அடைவிடத்தைக் குறித்த சிக்கலான கேள்விக்குப் பதில் நாம் 3:1ப் புரிந்து கொள்வதில் இருக்கிறது. பேதுரு எழுதியதாவது,

*"பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன்" (3:1). பேதுரு கிறிஸ்தவர்களுக்கு ஏராளமான நிருபங்களை எழுதியிருக்கலாம். எனவே அவர் எழுதின "1 பேதுரு நிருபத்தைத்" தான் இங்கு குறிப்பிடுவதாக இந்த வசனத்தை நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. 1 பேதுருவில் குறிப்பிடுவதற்கு அப்பால் வித்தியாசப் பட்டவர்களுக்கு அப்போஸ்தலன் சில நிருபத்தை நமக்குத் தெரியாதவர்களுக்கு எழுதியிருக்கக் கூடும். இரண்டாவது பேதுரு புத்தகம் ஒருவேளை 1 பேதுரு நிருபம் எழுதப்பட்ட மக்களையல்லாது, இந்தக் கூட்டாத்தாருக்கே எழுதப்பட்ட இரண்டாவது நிருபமாயிருந்திருக்கலாம். புதிய ஏற்பாட்டில் பாதுகாத்து வைக்கப்படாத அநேக காரியங்களை அப்போஸ்தலன் எழுதியிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக, பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய போது அதற்கு முன்பு எழுதப்பட்டதாக ஒரு நிருபத்தைக் குறிப்பிடுகிறார் (1 கொரிந்தியர் 5:9), மற்றும் லவோதிக்கேயருக்கு எழுதப்பட்டதாக ஒரு நிருபம் சொல்லப்பட்டுள்ளது (கொலோசெயர் 4:16).*

*பேதுரு தான் இதற்கு முன் எழுதிய நிருபத்தைக் குறித்து மிகச் சிறிய அளவில் சொல்லியிருக்கிறார், ஆனால் ஒரு குறிப்பைக் கொடுத்தார். அவர் இதை "இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்," என்று இது தனது இரண்டாவது நிருபம் என்கிறார் (3:2). அப்போஸ்தலன் என்ன நினைப்பூட்டுதல்களைத் தம்மனதில் கொண்டிருக்கிறார்? இரண்டாவது நிருபத்தில், அவர் தானும் இயேசுவும் தனிப்பட்ட ரீதியில் செயல்பட்டதை நினைவுகூர்ந்து அவர்களை நினைப்பூட்டுகிறார் (1:14, 17). மேலும், அவர் அவர்களை நினைவூட்டி கிறிஸ்துவின் உபதேசங்களை சபைகளுக்குள் புகுந்திருந்த கள்ளப் போதகர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை எழுதினார். 2 பேதுருவுடன் ஒப்பிடுகையில் 1 பேதுரு நிருபம் கனிசமான வித்தியாசங்களைக் கொண்டுள்ளது. நினைப்பூட்டப்பட்டவை எவைகளாக இருந்த போதிலும் 1 பேதுருவில் அவை சிலுவையையும் கர்த்தரின் வருகையையும் நோக்கியவைகளாக இருந்தன. 1 பேதுருவில் பிரச்சனையாக புறம்பேயிருப்பவர்களால் வருகிற உபத்திரவங்கள் குறிப்பிடப்பட்டது, 2 பேதுருவில் விசுவாசிகளுக்கு கள்ளப் போதகர்களால் வரும் அச்சுறுத்தல்களை பேதுரு குறிப்பிடுகிறார். 2 பேதுருவில், ஆசிரியர் அவருடைய வாசகர்களின் பிரச்சனைகளை சந்திப்பின்மூலம் அறிந்திருந்தார் என்று தெரிகிறது. 1 பேதுருவில் தாம் கேள்விப்பட்டவைகளையே சார்ந்து ஆசிரியர் இருந்துள்ளார். இந்த "இரண்டாம் நிருபம்" என்று பேதுரு சொல்வதால் மாத்திரம் ஏற்கனவே எழுத்தாளர் 1 பேதுருவின் அதே கூட்டத்தாருக்கு எழுதினதை குறிப்பிடுவதாக முற்றிலும் உறுதியாகச் சொல்லி விடமுடியாது.*

*இன்றைய வாசகர்கள் அப்போஸ்தலன் எழுதின நிருபத்தின் சாத்தியக்கூறுகளை பரிசீலிப்பது அவசியம், அது 2 பேதுருவின் வாசகர்களுக்கு அவர் எழுதிய 1 பேதுரு நிருபமல்லாது வேறு நிருபமாக இருக்கலாம். இருப்பினும், விளக்கவுரைகளில் மேற்கொள்ளச் செய்கிற கண்ணோட்டம், 1 பேதுரு எழுதப்பட்ட கூட்டத்துக்கே 2 பேதுருவும் எழுதப்பட்டது எனும் கருத்து தான், மேலும் அது 1 பேதுரு எழுதப்பட்டு சில வருடங்கள் கழித்து 2 பேதுரு எழுதப்பட்டது என்பதுதான். விவாதம் கீழ்வருமாறு போகிறது:*

*2 பேதுரு 3:1ல் சொல்லப்படும் கருத்து 1 பேதுருவையே குறிக்கிறது என்றால், பிறகு அது 1 பேதுரு 1:1ல் சொல்லப்படுகிற அப்போஸ்தலனின் கருத்துப்படி 2 பேதுரு எழுதப்பட்டவர்கள் ஆசியா மாநிலத்திலிருந்த சபைகளாகத்தானிருக்க வேண்டும். அது உண்மையானால், 1 பேதுரு எழுதப்பட்டு சில வருடங்கள் கழித்து 2 பேதுரு ஒருவேளை எழுதப்பட்டிருக்கலாம், மேலும், சபைகளை மோசம் போக்கின கள்ளப் போதகர்களைக் குறித்து அப்போஸ்தலன் அறிந்திருந்தார். சுவிசேஷச் செய்தியின் அவசியமானவைகளை கள்ளப்போதகர்கள் மதிப்பதில்லை என்று அறிந்த பேதுரு, 1 பேதுருவில் காணுகிற சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வித்தியாசப்பட்ட அக்கறையுடன் அவர்களுக்கு எழுதுகிறார்.*

*விவாதத்தில் காணப்படும் பிரச்சனை என்னவெனில் எழுதப்பட்டவர்கள் இரண்டு நிருபங்களுக்கும் சற்று வித்தியாசப்படுகின்றனர். 2 பேதுருவில் சொல்லப்பட்ட காரியங்களையும் புத்திமதிகளையும் இன்றைய வாசகர் புரிந்து கொள்ள முற்படுவரானால் 1 பேதுருவிலிருந்து அவருக்கு எவ்வித உதவியும் கிடைக்காது. இன்னொரு புறம், 2 பேதுரு 3:1 குறிப்பிடும் காரியம் 1 பேதுரு நிருபத்தைக் குறிப்பதில்லையென்றால், இரண்டு பேதுரு நிருபம் எழுதப்பட்டவர்கள் யாரென்று அடையாளப்படுத்தத் தேவையான காரியங்களை சேகரிப்பது அவசியமானது.*

*2 பேதுரு 3:1ல் குறிப்பிடப்படும் முந்திய நிருபம் 1 பேதுரு புத்தகம் இல்லையெனில், பிறகு 1, 2 பேதுரு எழுதப்பட்ட வரிசையையும் நிச்சயப்படுத்த இயலாது. 2 பேதுருவுக்கு முன்பு 1 பேதுரு எழுதப்பட்டது என்பது சாத்தியமே. பிறகு, அவை வரிசைப்படுத்தப்பட்டுள்ளபடி, அமைந்திருப்பது ஏன்? 2 பேதுரு முதலாவதாக எழுதப்பட்டிருக்குமானால், புதிய ஏற்பாட்டை தொகுத்தவர்கள் பிறகு ஏன் அவைகளை மாற்றி வரிசைப்படுத்தியிருக்கக் கூடாது? இந்தக் கேள்விக்கான பதில்கள் முதலில் தோன்றுவது போல் கடினமாயிராது.*

*பவுலின் நிருபங்கள் இரண்டு கொள்கைகளை மனதில் கொண்டு அமைந்திருப்பது தெளிவாய்க் காணுகிறது. ஒன்று, இந்த நிருபங்கள் சபைகளுக்கு எழுதப்பட்டவை முதலாவதாகவும், பின்பு தனிப்பட்டவர்களுக்கு எழுதப்பட்டுள்ளவை அடுத்ததாகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அதற்குப் பின்பு, நெடிய மற்றும் குறுகிய அதிகாரங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. அவைகள் எழுதப்பட்ட நாட்காட்டி வரிசைப்படி அமைக்கப்படவில்லை என்பது தெளிவாக இருக்கிறது. இதனால்தான் புதிய ஏற்பாட்டு தொகுப்புப் படி, எபேசியர் கொலோசெயர் நிருபங்களுடன் வர வேண்டிய பிலேமோன், தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்குப் பின் வருகிறது.*

*பொது நிருபங்கள் எழுத்தாளரின் வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன,*[6] *ஆனாலும் ஒரு எழுத்தாளரின் ஒன்றுக்கு மேற்பட்ட நிருபங்கள் இருப்பின், அவைகளும் கூட, நெடியவைகளிலிருந்து குறுகியவை வரை வரிசையில் அமைக்கப்பட்டவைதான் என்பது நம்பக் கூடியதாக இருக்கிறது. யோவானும் பேதுருவும் தான் தலா ஒன்றுக்கு மேற்பட்ட பொது நிருபங்களை எழுதியுள்ளனர்; ஆனால் ஒவ்வொன்றும் பவுலின் மாதிரியைப் பின்பற்றி அவைகள் நெடிய குறுகிய அதிகாரங்கள் முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அது உண்மையானதால், பேதுருவின் இரண்டு நிருபங்களின் அமைப்பு 2 பேதுருவுக்கு முன்பு எழுதப்பட்டது 1 பேதுரு*

*நிருபம்தான் என்று பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. 1 பேதுரு நிருபம் 2 பேதுரு நிருபத்தை விட நெடிய நிருபமாய் காணப்படுவதால் 1 பேதுரு முதலில் வருகிறது.*

*2 பேதுருவே 1 பேதுருவுக்கு முன்பு எழுதப்பட்டது என்பதற்கு சில குறிப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக, 2 பேதுரு மற்றும் யூதா புத்தங்களின் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் தன்மை 2 பேதுரு, விதி விலக்காக யூதக் கிறிஸ்தவர்களுக்காக, மற்றும் அவர்களுக்கு மட்டுமே எழுதப்பட்டது என்று ஒருவர் எதிர்பார்க்கக் கூடும் அளவுக்கு இருக்கிறது. யூதக் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்த ஒருவர் எதிர்பார்க்கும் நிகழ்ச்சிகளை 2 பேதுரு மற்றும் யூதா சுட்டிக்காட்டுகின்றன. 2 பேதுருவில் தேவன் தேவ தூதர்களையும் தப்பவிடாத செயலையும், நோவா, மற்றும் லோத்தையும் வாசகர்களுக்கு சுட்டிக்காட்டுகிறது (2:4-8). இரண்டு பேதுரு மேலும் தேவதூதர்களைக் குறிப்பிட்டு நியாயத்தீர்ப்பைக் குறித்து குற்றஞ்சாட்ட துணிய வில்லை என்றும் சொல்லுகிறது (2:11). பேதுரு ரோமாபுரிக்கு போவதற்கு முன்பு, யூதேயாவில் அவர் தங்கியிருக்கையில் தனது இரண்டாவது நிருபத்தை எழுதியிருப்பாரானால், அது எருசலேமில் நடந்த ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்பாக இருந்திருக்கக் கூடும் என்றால் (நடபடிகள் 15),[7] அது அவர் ஏன் யூத கிறிஸ்தவர்களுக்கு ஏற்கனவே பரிச்சயமான காரியங்களை பயன்படுத்தினார் என்பதை விளக்கமளிக்கும். மேலும், பேதுரு மற்றும் இயேசுவைக்குறித்த கதைகள் பெரிய சீரியா, கலிலேயா மற்றும் வடக்கு பகுதியில் புறஜாதிகளையே அதிகமாகக் கொண்ட இடங்களில் பரவியதைக் காட்டிலும் மிக அதிகமாக பரவியிருக்கக்கூடும். பேதுருவின் மரணத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் (1:13) மற்றும் மறுரூபக்காட்சி (1:17, 18) ஆகியன 2 பேதுருவில் குறிப்பிடப்படுவது ஏன் என்பதற்கு விளக்கமளிக்கக் கூடும்.*

*அநேகமாக 2 பேதுரு யூதர்களுக்கு எழுதப்பட்டது என்பதற்கு குறிப்பிடத்தக்க ஆட்சேபனை எழும்பக் காரணம், இந்த நிருபம் பழங்கால கிரேக்கப் பண்பாட்டு இலக்கியத்தில் எழுதப்பட்டிருப்பதால் அதை அதிகப் பட்சமாக புறஜாதி வாசகர்களே புழக்கத்தில் கொண்டிருந்தனர் என்பதால் தான். கிரேக்க யூத கிறிஸ்தவர்கள் சமகாலத்து கிரேக்க மனோபாவனையுடன் வசதியாக இருக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தினால்தான். குறிப்பான விளக்கவுரைகள் 2 பேதுரு கிரேக்க மற்றும், ஃபீலோ (கிறிஸ்துவின் காலத்திலிருந்த அலெக்சாந்திரிய யூதன்), கிரேக்கத்திற்கும் மற்றும் பிற கிரேக்க இலக்கியங்களுக்கும் ஏறத்தாழ அதே காலக்கட்டத்தில் இருந்தவைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை மேற்கோளிட்டுக் காட்டுகின்றன.[8] பேதுரு அப்படிப்பட்ட பாஷையை பயன்படுத்தியிருக்க மாட்டார் என்பது ஒரு பொதுவான யூகம், அல்லது அவர் எழுதிய ஜனங்கள் யூதக் கிறிஸ்தவர்களைக் கொண்டிருந்திருக்குமானால் அவர் அப்படிப்பட்ட பாஷையை பயன்படுத்தியிருக்க மாட்டார் என்பது ஒரு யூகம்.*

*ஆகிலும், சாத்தியக்கூறுகளை நாம் காணும்போது பேதுரு ஒரு வேதபாரகனை அவன் பழங்கால கிரேக்க பண்பாட்டில் இருந்தவனாகையால், தனக்கு அமர்த்திக்கொண்டு இருந்திருக்கக்கூடும். 2 பேதுருவில் பயன்படுத்தப்பட்டுள்ள பாஷை 60ம் ஆண்டின் மத்தியப்பகுதியிலோ அல்லது பின்னதாகவோ எழுதப்பட்டிருக்க இயலாது.*

கூடுதலாக, பெரிய சிரியா/பலஸ்தீனாவில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் பற்றிய சாட்சியமுண்டு, அவர்கள் தாராளமாக தங்கள் நடைமுறை மொழிமற்றும் சிந்தனைகள் ஆகியவற்றில் கிரேக்கம் பேசும் உலகில் வாழ்ந்துள்ளனர்.[9] நாம் எடுத்துக் கொண்டபடி, அப்போஸ்தலன் பேதுருவே இந்த நிருபத்தின் ஆசிரியராக இருந்தால், நிருபம் 60ம் ஆண்டுகளின் மத்தியில் எழுதப்பட்டிருந்தால் அவர் உபயோகிக்கும் கிரேக்கத்தைத் தழுவிக் கொண்ட யூதர்களின் பாஷையைக் குறித்து எவ்வித விளக்கத்தைவும் கொடுக்காது. 2 பேதுரு நிருபம் 40ம் ஆண்டின் பின்பகுதியிலோ அல்லது 60ம் ஆண்டின் மத்தியிலோ எழுதப்பட்டிருந்தால், அது யூதேயாவிலிருந்தோ அல்லது ரோமிலிருந்தோ எழுதப்பட்டிருந்தால், பழங்கால பண்பாட்டுக்குரிய கிரேக்க மொழியில் ஒரு கலிலேய மீன்படி செம்பவனிடமிருந்து ஒருவர் அதை எதிர்பார்க்க இயலாது.

வாக்குவாதம் பெரும்பாலும் 2 பேதுருவில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளப் போதகர்களைக் குறித்தும் அது சபையின் வரலாற்றில் கடைசிகால நிகழ்வுகளாகவும் வளர்ந்து கொண்டே போகிறது. இரண்டு பரிசீலனைகளில் இந்த தர்க்கம் துக்கத்தைக் கொடுக்கக் கூடியவைகளாயுள்ளன. (1) 2 பேதுருவில் கள்ளப் போதகர்கள் எவைகளை முரண்பாடுகளாய்ப் போதிக்கிறார்கள் என்பது குறித்து மிகவும் குறைவாகவே சொல்லுகிறது. அவைகள் விபச்சார மயக்கம்; அது போதிய தெளிவுள்ளது (2:14). அவர்கள் ஆவிக்குரிய அதிகாரத்துக்கு மிகச் சிறிய அளவு மதிப்பை மட்டுமே அளிக்கிறதாகக் காணப்படுகிறது (2:10, 11). அவர்கள் பொருளாசையும் துணிகரமுமான செயல். உள்ளவர்கள். கர்த்தருடைய மறுவருகையை குறித்து பேதுரு குறிப்பிட்டவை கள்ளப் போதகர்களால் போதிக்கப்படுகிறவைகளை கடிந்து கொண்டு கண்டனம் பண்ணும்படியாகத்தான். இதில் கவனிக்கப்பட வேண்டிய காரியம் என்னவெனில் மனமும் உடலும் வெவ்வேறு என்ற கோட்பாடு பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை மேலும் இயேசு மாம்சத்தில் வந்ததை மறுக்கும் போதனை குறித்து எந்த குறிப்பும் இல்லை என்பதுதான், இவை இரண்டுமே மறையியல் ஞானம் எனும் கொள்கையை சரியென ஏற்கும் உபதேசமாகும். 2 பேதுருவில் குறிப்பிடப்படும் (கள்ளப்) போதகர்களின் போதனை முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் பின்பகுதியில் இருந்தவை என்பது நிருபிக்கப்பட முடியாது.

(2) கி. பி. 40-150ல் சபையில் உபதேசகோட்பாடுகளின் வளர்ச்சி குறித்து மிகக் குறைவாகவே வரலாற்று ஆசிரியர்கள் அறிந்திருந்தனர். 2ம் நூற்றாண்டில், சபை சில பகுதிகளில் மறையியல் ஞானிகளால் அச்சுறுத்தப்பட்டன, ஆகிலும் எவ்வகையிலும் இந்தப் போதனை எங்கு துவக்கப்பட்டது என்றோ அல்லது எப்படி அது படிப்படியாக சபைக்குள் ஊடுருவியது என்றோ உறுதியாகத் தெரியவில்லை. நிருபத்தில் சொல்லப்பட்டுள்ள போதகர்களையோ அவர்களின் போதனைகளையோ வைத்து 2 பேதுரு புத்தகம் 60ம் ஆண்டுகளில் எழுதப்பட்டது என்ற முடிவுக்கு வந்து 40ம் ஆண்டின் பின்பகுதியில் எழுதப்பட்டதற்கு எதிராக நமது அறிதலை அடிப்படையாக்கி விடுதல் கூடாதது. 2 பேதுரு 2ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கூறுவோர் மேலும் அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தை இப்படியாக மறுக்கிறவர்கள், அடிக்கடி தர்க்கித்து நிருபத்தில் சொல்லப்பட்ட (கள்ளப்) போதகர்கள் சபையில்

ஏற்பட்ட பின்னதான பிரதிபலிப்புகள் என்கின்றனர். அதற்கான மூலக் கூறுகள் போதியளவுக்கு இல்லை. அந்தக் காரியத்தினிமித்தம், நிருபமானது 40ம் ஆண்டு வாக்கில் எழுதப்பட வில்லை, 60 களில் அப்போஸ்தலனால் எழுதப்பட்டது என்ற கருத்து சரியானதாகப்பட வில்லை, மேலும் குறிப்பிட்டுள்ள (கள்ளப்) போதகர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததற்கான காலமாக தோன்றவில்லை.

2 பேதுரு புத்தகம் 40ம் ஆண்டுகளில் எழுதப்பட்டது குறித்து ஆட்சேபம் எழும்ப ஒரு வினயமான காரணம், அதன் ஆசிரியர் பவுலின் சில நிருபங்களில் பரிச்சயமாயிருந்துள்ளார் (3:15, 16). பவுலின் நிருபங்களைக் குறித்து 40ம் ஆண்டு போன்ற அவ்வளவு முன்னதாக பேதுரு அறிய சாத்தியக்கூறுகள் இருந்திருக்குமா, அதிலும் குறைவான சாத்தியம் அவைகளை மற்ற "வேத வசனங்களுடன்" "சாதகமான முறையில் ஒப்பிடக்கூடுமா?" முதலாவதாக, 2 பேதுரு 3:15, 16ல் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களை பேதுரு நேரடியாக பவுலின் நிருபங்களிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவு என்று நமக்குத் தெளிவாக்கப்படவில்லை, என்பதை நாம் கருத்தாய்க் கவனிக்கக் கூடும். அப்படிப்பட்டவைகள் இருந்ததையும், அவைகளில் சில காரியங்கள் அறிவதற்கு அரிதாயிருக்கிறது என்பதையும், அவைகளை கள்ளப்போதகர்கள் தங்களுக்கு அநுகூலமாக்கிக் கொண்டனர் என்பதையும் மட்டுமே அவர் அறிந்திருந்தார். 40ம் ஆண்டின் பின்பகுதியில் பவுல் நிருபங்களை எழுதியிருப்பதை பேதுரு அறிந்திருக்கக்கூடும். கலாத்தியர் புத்தகம் அப்போஸ்தலர் 15ல் குறிப்பிடப்படுகிற எருசலேமின் ஆலோசனைக் கூட்டத்துக்கு சற்று முன்பதாக எழுதியிருந்தால், பேதுருவுக்கு அதிலே பரிச்சயமாயிருக்கக் கூடும், கூடுதலாக, பேதுரு பவுலால் எழுதப்பட்ட அறியப்படாத வேறே நிருபங்களையும் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார் என்பது நினைத்துப் பார்க்க இயலாததாயிருக்கிறது. 2 பேதுருவில் குறிப்பிடப்பட்ட பவுலின் நிருபங்கள் 2 பேதுரு புத்தகத்தை 40ம் ஆண்டின் பின்பகுதியில் எழுதினதாக கூறப்படும் காரியத்தை. மேற்கொள்ளக் கூடாத ஒரு பிரச்சனையல்ல.

மாற்றுக் கருத்தாக, 2 பேதுரு, யூதா, யாக்கோபு ஆகிய நிருபங்கள் சபையின் ஜீவிய வரலாற்றில் துவக்ககால நிருபங்களாக, இவையனைத்துமே 40களின் பிந்திய காலத்தில் எழுதப்பட்டவைகளாக, ஆலோசனையாக நாம் சொல்லுகிறோம். மேலும், அவை யூதக் கிறிஸ்தவனிடமிருந்து, சிரியா/பலஸ்தீன சூழ்நிலையில் வந்தவை என்பதையும் நாம் ஆலோசனையாக நாம் குறிப்பிடுகிறோம். இப்படியிருப்பதால், 2 பேதுரு 1 பேதுருவுக்கு முன்பு எழுதப்பட்டதுதான். யூதா, யாக்கோபு, 2 பேதுரு ஆகிய புத்தகங்கள் எருசலேம் சபையின் முன்னோடிகளால் பலஸ்தீன முழுவதிலும் சிதறியிருந்த யூதர்களாயிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு எழுதப்பட்டது.

பவுலின் மனமாற்ற நிகழ்ச்சி கதை தமஸ்குவிலிருந்த யூதர்கள் விசுவாசிகளாக ஆரம்பக் கட்டத்திலேயே மாறினார்கள் என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது. பவுலின் மன மாற்றத்துக்குப் பின் பத்து ஆண்டுகளில் மற்ற பட்டணங்களிலும் கிராமங்களிலும் அவைகளின் சுற்றுப்புறங்கள் முழுவதிலும் கிறிஸ்துவை அதிகமாய் அன்புடன் வரவேற்றார்கள். சில போதகர்கள் இந்த யூதக் கிறிஸ்தவர்களை படிப்படியாக தங்கள் வசப்படுத்தி கிறிஸ்தவ சுதந்தரத்தை பறித்து மனித விசுவாசத்தினாலும் தேவனின் அருளாலும் உலக

ஆசைகளிலிருந்து மனிதன் விடுபட முடியும் எனும் கொள்கையின் பக்கம் திருப்ப முயற்சித்தார்கள் என்று காணுகிறது. அவர்கள் தங்கள் சுதந்தரத்தை எருசலேமின் சபை அதிகாரத்திலிருந்து உறுதியாக காத்துக் கொண்டிருந்தனர். ஒரு வகையில் அவர்கள் பவுலிடம் தங்களுக்கு உதவும்படி வேண்டினார்கள். யூதாவும் 2 பேதுருவுமாகிய இரண்டு புத்தகங்களுமே கள்ளப் போதகர்களை எதிர்கொள்ள ஏதுவாக ஒரே மாதிரியான கூட்டத்தாருக்கு எழுதப்பட்டது. இது உண்மையானதால், மூன்று நிருபங்களும் யாக்கோபு, யூதா, மற்றும் 2 பேதுரு, 40ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் எழுதப்பட்டவைதான்.

## 2 பேதுருவில் கள்ளப் போதகர்கள்

விளக்கவுரையாளர்கள் பொதுவாகக் குறிப்பிடுகையில் 2 பேதுருவில் முரண்பாடாய் எழும்பிய கள்ளப்போதகர்கள் மறையியல் ஞான கோட்பாடுகளின் தொன்மைக் கூற்றுகளை பரிந்துரைப்பவர்களாயிருந்தனர்.[10] ஆகிலும், அந்தப் போதகர்கள், அவைகளை உறுதிப்படுத்திக் கொள்வதில் வெகு தொலைவிலிருந்தார்கள். மறையியல் ஞானம் என்பது மனம், உடல் இரண்டும் இருவேரென்னும் கோட்பாட்டுமுறை. இந்த மறையியல் ஞானிகள் அனைத்தும் உலகப்பருப்பொருள் மற்றும் ஆவிக்குரியவைகள் என பிரிக்கப்பட்டவை என்று போதித்தார்கள், ஆவி நன்மையாயிருந்தது; பருப்பொருள் தீமையாயிருந்தது. ஆகையால், தேவனுடைய குமாரன், முற்றும் நல்லவரானதால், அவர் மாமிசத்தையும் இரத்தத்தையும் உடையவராயிருந்திருக்க இயலாது. இயேசு, அவரது ஊழியகாலத்தில் கூட, மாம்சத்திலே இருந்ததில்லை என்று போதித்தார்கள் (2 யோவான் 7). 2 பேதுருவில் பேசப்படுகிற போதகர்கள் மனம், உடல் இரண்டும் வெவ்வேறுபட்டவை என்று கொள்கையுடையவர்களாயிருந்தனர் என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை, மனம், உடல் வேறுபட்டவை எனும் போதனை “தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிக்கும்” தன்மையைக் குறிப்பிடலாம் (2 பேதுரு 2:1), ஆனால் மறையியல் ஞானிகள் மாத்திரம் கர்த்தரை மறுதலித்தவர்களல்ல.[11]

2 பேதுருவை நாம் கவனமாகப்படித்தால், அப்போஸ்தலன் எதிர்கொண்ட கள்ளப்போதகர்களைக் குறித்து சிறிதளவு விஷயங்களையே நம்பிக்கையோடே நாம் சொல்லலாம். அவர் கள்ளப் போதகர்களை எதிர்கொண்டார் என்பதைக் கவனியுங்கள்; அவர் பெரும்பாலும் அவர்களுடைய போதனையை வன்மையாகக் கண்டிக்கவில்லை. மறையியல் ஞானத்தின் போதனைகளையும் தர்க்கத்தின் பின்னணியில் காணும் பொய்களையும் நிருபத்தில் வாசித்துப்பார்க்க வல்லுனர்கள் முற்பட்டனர். அதைச் செய்த போது, அவர்கள் வாசித்தவைகளை அடிப்படையாகக் கொண்டு நிருபத்தை மொழியாக்கம் செய்தனர். இந்த கள்ளப் போதகர்கள் விபச்சாரமயக்கமாய் நியாயமற்ற சுவிசேஷத்தைப் போதனை பண்ணினார்கள் என்று குறிப்பிடுவது பாதுகாப்பானதாயிருக்கும் (2:19). அவர்கள் இயேசுவின் முழுமையான தெய்வீகத்தை தெளிவாக மறுத்தார்கள் (2:1). இயேசு முற்றிலும் தெய்வீகம் நிறைந்தவராயிராதபடியால், அவர்கள் “அவருடைய வருகையைக்குறித்து வாக்குத்தத்தத்தை” மேலோட்டமாய் எடுத்துக் கொண்டார்கள் (3:4). எருசலேம் சபையிலிருந்த மூப்பர்களைக் காட்டிலும் தங்களுடைய அறிவு மிக உயர்ந்தது என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். 2 பேதுரு புத்தகம்

போதிக்கும் (கள்ளப்) போதகர்களைக் குறித்து இவ்வளவு மட்டும்தான் நம்மால் சொல்ல இயலும்.

## 2 பேதுருவுக்கும் யூதாவுக்கும் உள்ள தொடர்பு

"உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்" என்ற பேதுருவின் விளக்கத்துக்கும் (2 பேதுரு 2:1) "தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி(ய) ... பக்தியற்றவர்களாகிய சிலர்" என்று விளக்கமளித்த யூதாவின் வார்த்தைகளுக்குமிடையே (யூதா 4, 5), ஒற்றுமைகள் அதிரடியாகக் காணுகின்றன. கள்ளப் போதகர்கள் பொதுப்படையான கருத்துடையவர்களாயிருந்தும் பேதுருவும் யூதாவும் நன்கு அறிந்திருந்த சபையிலே அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர் என்பது எதிர்பார்க்கப்பட முடியாததாய் இருக்கிறது. மொழிநடையில் விரிவான ஒத்த தன்மையிருப்பது எதிர்பார்க்கப்படாததாக இருக்கிறது. பேதுருவும் யூதாவும் ஒரேவிதமான தர்க்கங்களையும், விளக்கப்படுத்த ஏதுவான ஒரே வித உதாரணங்களையும், வழக்கத்துக்கு மாறான ஒரே விதமான வார்த்தைகளையும் வார்த்தைத்தொகுப்புகளையும் பயன்படுத்தியுள்ளனர். பேதுரு விவாதித்து தேவன் தேவதூதர்களையும் தப்பவிடாமலிருந்திருப்பாரானால், நோவா காலத்தில் பூர்வ உலகத்தையும் தப்ப விடாமலிருந்திருப்பாரானால், சோதோம் கொமோரா பட்டணத்தாரையும் தப்பவிடாதிருந்திருப்பாரானால், சபையிலிருப்பவர்களைத் தன் வயப்படுத்தும் விபச்சார மயக்கம் நிறைந்தவர்களை அவர் தப்ப விட மாட்டார் என்றார் (2 பேதுரு 2:4-9). யூதாவும் இதையே விவாதித்தார். அவர் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருவதையும், தேவதூதர்களையும், சோதோம் கொமோராவையும் தனது உதாரணங்களாகப் பயன்படுத்தினார். கிரேக்க மொழி பிரதிகளில் இவ்விரண்டையும் பக்கம்பக்கமாக வைத்தால், மிகப் பெரிதான ஒற்றுமையைக் காண இயலும், மேலும் அவைகளுக்கிடையே ஒருவகை கல்விக்கடுத்த தொடர்பு இருப்பதாக அநேகர் நம்புகின்றனர்.

பேதுரு யோவான் இருவருமே பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதினார்கள். சிலர் யூதாவுக்கும் பேதுருவுக்குமிடையேயான சொல்நடை அவர்களின் பொதுவான ஏவுதலை குறிப்பதாக கூறுகின்றனர். ஆகிலும், அந்த விளக்கம் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்குப் பதில் மேலும் பிரச்சனைகளை கொண்டு வரக் கூடியவைகளாயிருக்கின்றன. தேவனுடைய செய்தியை எழுதும்படி பரிசுத்த ஆவியானவர் எப்படி ஏவினார் (2 பேதுரு 1:21) என்று திருமறையில் உறுதிப்படுத்தப்படவேயில்லை. வசனத்தைக் கொண்டு வருவதில் மனித மூளைக்கும் பரிசுத்த ஆவிக்கும் இடையே ஒன்றுக்கொன்று எப்படி செயலாற்றின என்று நம்மால் விளக்கிச் சொல்ல இயலாவிட்டாலும், இது தெளிவாயிருக்கிறது: பரிசுத்த ஆவியானவர் எழுதுபவரின் மனதை அப்படியே ஆக்கிரமித்துக் கொண்டு எழுத வைத்தல் முறையில் செய்யவில்லை. அப்படியிருந்திருக்குமேயானால், நாம் அனைத்து திருமறைப்பதிவேடுகளும் ஒரேமாதிரியான எழுத்து நடையில், சொல் நடையில் மற்றும் கருத்துக்களில் ஒரேமாதிரியாக அமைவு பெற்றிருப்பதை நாம் எதிர்பார்க்கக் கூடும்.

எப்படியோ தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய செய்தியைக் கொடுக்க திருமறையை எழுதினவர்கள் மூலமாக எழுதினவர்களால் கிரியை

*செய்துள்ளார். ஒவ்வொரு எழுத்தாளரும் தங்கள் தங்கள் சுய நினைவுகளோடு இருக்கும் நிலையில் சொல்நடை அவர்களுடைய சொந்த விருப்பப்படி அமைக்கப்பட்டன. தன்னை எதிர் கொண்ட சூழலுக்கு ஏற்ப ஒவ்வொருவரும் எழுதினார்கள். தேவ - மனித தொடர்பு குறித்த எந்த ஒரு ஆய்வுக் கட்டுரையையும் கோட்பாடாக பரிசுத்த ஆவியானவர் கொடுக்கவில்லை. எழுதுவதற்கான கருத்துக்களை ஜனங்களின் அன்றாட நிஜவரலாற்று அமைப்புகளிலிருந்து கொடுத்தார். யூதாவும் பேதுருவும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதின போது அவர்கள் இருவரும் அவர்களாகவே இருந்தனர். இருவரும் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதால் இருவரது மொழிநடை ஒத்துப்போவதை வைத்து முடிவுக்கு வர இயலாது.*

*2 பேதுருவுக்கும் யூதாவுக்குமிடையே கல்விக்கடுத்த எழுத்து நடைதொடர்பு என்பதன் பொருள் ஒன்றேல் யூதா 2 பேதுருவிலிருந்து கள்ளப் போதகர்களைக் குறித்த அதிகப்பட்ச விளக்கங்களைத் தனக்குப் பெற்றிருக்க வேண்டும், இல்லையேல் பேதுரு யூதாவிலிருந்து பெற்றிருக்க வேண்டும், அல்லது இருவருமே ஒரு பொதுவான காரணியிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். இவைகளைப் பரிசீலிக்க வேண்டிய அவசியமுண்டு என்ற நிலையில், பேதுருவும் யூதாவும் ஒரு மூன்றாவது காரணியிடமிருந்து தகவல்களைப் பெற்றனர் எனும் எண்ணம் ஒரு அவசியமற்ற குழப்பத்தை அறிமுகப்படுத்துகிறது. அப்படியொரு மூலக் காரணி இருந்தது என்பதை நிருபிப்பது சாத்தியமாயிருக்கலாம் அல்லது சாத்தியமற்றதாயுமிருக்கலாம். இரண்டு நிருபங்களிலுமே ஏதோ ஒரு அறியப்படாத காரணியிடமிருந்து ஆதாரம் பெற்றதாக ஏதுவும் சொல்லப்பட வில்லை. ஒரு பொதுவான காரணியிடமிருந்து பெற்றதாக கூறப்படுவதை முடிவுக்குக் கொண்டு வந்து, 2 பேதுருவும் யூதாவும், ஆகிய நம்மிடத்தில் இருப்பவைகளைக் கொண்டு பரிசீலிப்போம். பேதுருவும் யூதாவும் மூன்றாம் காரணியிடமிருந்து பெறப்பட்டிராவிட்டால், மொழிநடை ஒற்றுமைகள் இரண்டு பதிவேடுகளுக்குமிடையே முடிவெடுக்க வேண்டியதெல்லாம் ஒன்று மற்றொன்றிலிருந்து வந்தது என்பதுதான். பிறகு கேள்வி எழும்புகிறது, எந்த நிருபம் முந்தி எழுதப்பட்டது? எது முதலில் விநியோகிக்கப்பட்டது?*

*பழைய விளக்கவுரைகள் தர்க்கித்து யூதாதான் 2 பேதுருவிலிருந்து தனது நிருபத்துக்கு தகவல் பெற்றதாகக் கூறுகின்றனர். மிகச் சமீபகால விளக்கவுரைகள் யூதாவே முன்பு எழுதப்பட்டது என்று பொது ஒப்புதல் அளிக்கின்றன. யூதாவுக்கு முதலிடம் கொடுக்கப்படுவது பலமாக உள்ளது. முதலாவதாக, யூதா குறுகிய நிருபமாயிருப்பதால் அதுவே முதலில் எழுதப்பட்டது என வாக்குவாதம் செய்யலாம். பேதுரு யூதாவின் வார்த்தைகளில் சிலவற்றை பயன்படுத்தி ஒரு நெடிய நிருபத்தை எழுதியிருக்கலாம் என்று நினைப்பது அதிக புத்திசாலித்தனம், இது 2 பேதுருவின் ஒரு பகுதியை செதுக்கி எடுத்து யூதா தனது சுயபயன்பாட்டிற்காக தனது நிருபத்தை உருவாக்கினார் என்பதை விட சிறப்பானது. மேலும். யூதா தனக்கு முன் 2 பேதுரு நிருபத்தைக் கொண்டிருந்தால், பேதுரு எழுதிய முழு நிருபத்தை, அப்படியே யூதா அனுப்பியிருக்கலாமே எனும் கேள்வி ஒருவருக்கு எழுப்பக் கூடும். ஏதாவது தனிப்பட்ட சொந்த வார்த்தைகளை தனி நிருபத்தில் எழுதி கூட்டிச் சேர்ந்திருக்கக் கூடும். இந்தக் கருத்துக்களுக்கெல்லாம்*

அப்பால், தனித்தனியே தன்னை ஆசிரியர்கள் வெளிப்படுத்திய விதத்தைக் கொண்டு, மொழி அனுபவசாலிகள் அவர்களின் வார்த்தை நுணுக்கங்களை கண்டு பிடித்து, ஒரு முடிவுரையாக அவர்கள் அதற்கு எதிரிடையாக இருப்பதற்குப்பதிலாக பேதுருதான் யூதாவைப் பயன்படுத்தியிருப்பதுபோல் காணுகிறது என்கின்றனர். முடிவில், யூதாவா 2 பேதுருவா எது முந்தி எழுதப்பட்டது என விளக்கமளிப்பது இரண்டு நிருபங்களுக்குமே முக்கியமானதல்ல. ஆகிலும், யூதாவின் வெளிச்சத்தில் (பொருளில்) 2 பேதுருவை வாசித்தால் அதைப் போல யூதாவில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு காரியம் ஒரு வாக்கியமோ அல்லது சொற்றொடரோ அதிக அர்த்தமுள்ளதாக காணப்படும்.

## முடிவுரை

2 பேதுரு எப்பொழுது எழுதப்பட்டது என்பது குறித்த சூழ்நிலைகளை துல்லியமாக விவரிப்பது இயலாத காரியமானதால், பின்வரும் காரியங்கள் விவரங்களைக் கொடுக்கிறது. பவுல் புறஜாதிகளின் ஊழியத்தைச் செய்து கொண்டிருந்த வேளையில். அது ஒரு ஆரம்பநிலையிலிருந்தது. பலஸ்தீனா சீரியா முழுவதும் யூத சமுதாயங்களுக்குள் சபையின் ஆதிக்கம் சென்று கொண்டிருந்தது. ஆரம்ப நாட்களின் போது, கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவனல்லாத யூதர்கள் அதே ஜெப ஆலயங்களில் தொடர்ந்து தொழுது கொண்டிருந்திருக்க வேண்டும், கிறிஸ்தவர்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஒன்றுகூடி இயேசுவை கிறிஸ்துவாக தொழுகை செய்து பந்தியில் பங்கு பெற்றுக் கொண்டிருந்தார்கள். பேதுருவும் யூதாவும் இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் முதல் பத்து வருடங்களுக்குள் துணிகரமாக எருசலேமுக்கு வெளியே சென்றிருக்கக் கூடும். அநேகமாக நமது கணக்குப்படி யூதேயாமுழுவதிலும், கலிலேயாவிலும் வடக்குப் பகுதிகளான தமஸ்குவுக்கு அப்பாலும் கூட அவர்கள் சென்று, யூதர்களை மனமாற்றம் செய்வதில் காரணிகளாயிருக்க சாத்தியமிருந்தன.

பத்து வருடங்களுக்குள்ளாகவோ என்னவோ சில போதகர்கள், பவுல் விடுதலைக்காகவும் கிருபைக்காகவும் வேண்டுதல் பண்ணியதை தவறாகப் புரிந்து கொண்டு, கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ வேண்டுமென்ற கோரிக்கையை நிராகரிக்க விரும்பினார்கள். அவர்கள் சபைகளைப் படிப்படியாக வசப்படுத்தி பின்பற்றுவோரை தெரிந்து கொண்டார்கள். பேதுரு யூதா ஆகிய இருவருமே இப்படிப்பட்ட (கள்ள) போதனைகள் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி கிறிஸ்தவ செய்தியுடன் ஒத்துபோக வைத்து விடுமோ என்று பயப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும், முன்பு யூதாவும், பின்பு பேதுருவும், சபைகளுக்கு ஒரு நிருபங்களை எழுதினார்கள். அச்சபைகளில் அவர்களுக்கு செல்வாக்கும் இருந்தது, ஆதலால் இந்த (கள்ளப்) போதகர்கள் போதித்திருந்தவைகளின் விளைவுகளை பயனற்றுப்போகச் செய்திருந்தனர். யாக்கோபு தனது நிருபத்தை அதே காலக்கட்டத்தின் அருகாமையில், அதைப் போன்ற ஒரு கூட்ட ஜனங்களுக்கு எழுதினார். யூதா, பேதுரு ஆகியோரைப் போலவே யாக்கோபும் நல்ல ஊழியங்களில் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் அர்த்தத்தை அறிந்து கொண்டிருந்த வேளையில் அவைகள்

*புறக்கணிக்கப்பட்டது குறித்து அக்கறை கொண்டிருந்தார். விசுவாசமும் கிரியையும் ஒன்றாக செயல்பட வேண்டியவை என்று யாக்கோபு குறிப்பாகச் சொன்னார். பேதுரு 2வது நிருபம் என்று நாம் கூறும் கிரியையை எழுதிய பின், அவர் பயணம் பண்ணி யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் பிற இடங்களில் பிரசங்கித்தார், ஆசியா முனையிலும் கொரிந்துவிலும் கூட அவர் பிரசங்கித்தார். முடிவில் அவர் ரோமிற்கு வந்தார். ரோமிலிருந்து, 2 பேதுரு நிருபத்தை எழுதி பல ஆண்டுகளாகி, இப்பொழுது நாம் அறிந்திருக்கிற 1 பேதுரு என்ற புத்தகத்தை அவர் எழுதினார்.*

## புற (வரை) குறிப்பு

I. *வாழ்த்துதல்: ஒரே விதமான விசுவாசத்தை உடையவர்களுக்கு* (1:1, 2)

II. *கிறிஸ்துவைப் பற்றிய உண்மையான அறிவு* (1:3-21)
- A. *ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டியவை* (1:3-9)
- B. *நித்திய ராஜ்யத்திற்குட்படும் பிரவேசம்* (1:10, 11)
- C. *நினைப்பூட்டல்* (1:12-15)
- D. *"அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் காணுதல்"* (1:16-18)
- E. *ஏவப்பட்ட வசனமும் அதன் அதிகாரமும்* (1:19-21)

III. *கள்ளப் போதகர்கள்* (2:1-22)
- A. *கள்ளப் போதகர்களைக் குறித்த எச்சரிக்கை* (2:1-3)
- B. *தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நிச்சயம்* (2:4-10)
- C. *கள்ளப் போதகர்களின் நடத்தைகள்* (2:10-16)
- D. *கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுவோர்* (2:17-22)

IV. *கிறிஸ்துவின் இரண்டாம் வருகை* (3:1-16)
- A. *"உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புதல்"* (3:1, 2)
- B. *"அவர் வருவார் என்கிற வாக்குத்தத்தம் எங்கே?"* (3:3-7)
- C. *"கர்த்தருடைய நாள்"* (3:8-10)
- D. *கர்த்தருடைய நாளை முன்னிட்டு பரிசுத்தமாய் வாழ்தல்* (3:11-13)
- E. *எச்சரிக்கையாயிருக்க ஒரு அழைப்பு* (3:14-16)

V. *ஒரு இறுதி அறிவுரை* (3:17, 18)

## பயன்பாடு

**அறிவும் விசுவாசமும்**

*டியூக் பல்கலைக்கழகத்தில் உள்ள வளாகத்தில் மத்திய பகுதிக்கு அருகில்ஒரு உலோகப் பலகையில் பின்வரும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன: "டியூக் பல்கலைக்கழகத்தின் நோக்கம் நித்திய ஐக்கியத்திற்கான அறிவையும் தேவனுடைய குமாரனாகிய, இயேசு கிறிஸ்துவின் மார்க்கத்தை அவருடைய போதனையின் அடிப்படையிலும் நடத்தையின் அடிப்படையிலும் அடைய ஏதுவான விசுவாசத்தைக் கொடுப்பது தான்."*

இன்றைய ஜனங்கள் தங்களுடைய விசுவாசத்தை ஒரு காற்று உட்புக முடியாத தடுப்பறையிலும் மற்றும் அறிவை விசேஷமாக விஞ்ஞானிகள் கோருகிற வகையான அறிவை மற்றொன்றிலும் வைக்கின்றனர். டியூக் பல் கலைக்கழக வளாக உலோகப் பலகை கூறும் செய்தி எப்பொழுதுமே அப்படி இருந்ததில்லை என்பதை ஞாபகப்படுத்துவதாக இருக்கிறது. "பல்கலைக்கழகம்" மற்றும் "பிரபஞ்சம்" ஆகிய இரண்டுமே எல்லாவித அறிவுக்கும் ஒரு அடிப்படை ஐக்கியம் உண்டு என்பதை ஆலோசனையாகச் சொல்லுகின்றன. ஐக்கியம் எங்கே இருக்கிறது என்று நாம் ஒருவேளை கண்டு பிடிக்கக் கூடாமல் இருக்கலாம், ஆகிலும் தேவனில் நாம் வைத்துள்ள விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டுமாகில் அனைத்து அறிவும் அதன் அடிப்படை ஊற்றுக்காரணி அவருக்குள் இருக்கிறது. அறிவானது அதன் காரணியை தேவனில் கண்டுபிடித்தால், பிறகு இப்பிரபஞ்சம் அர்த்தமுள்ளதாகிறது. தேவன் தம்மிலே தாமே முரண்பட்டிருப்பதில்லை.

தனது இரண்டாவது நிருபத்தில், பேதுரு தான் எதிர் கொண்ட கள்ளப் போதகர்களைக் குறித்து ஒரு குறிப்பான உபதேசங்கள் பற்றி விவரமாக பேசுவதில்லை, ஆகிலும், நிருபத்தின் துவக்கப்பகுதியில் அடிக்கடி அறிவைக் குறிப்பிடுவதால் பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்களுக்கு மேலானதான ஒரு அறிவை அவருடைய எதிராளிகள் உரிமை கொண்டாடின எண்ணத்தை விட்டுச் செல்கிறது. அறிவைப் பற்றிய சர்ச்சை வரும் போது பேதுரு பின் வாங்கி நிலைகுலைந்து போவதில்லை. அறிந்து கொள்ளுதலின் பலனின் உச்சக்கட்ட தகுதியை அவர் உறுதிப்படுத்தினார். மேலும், அவர் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொண்ட அறிவு உச்சக்கட்ட பயனுடையது என்று சொன்னார். ஒன்றுபட்ட அறிவுடன் கூடிய உயர்தர ஒழுக்கமும் நடத்தையும் பற்றி அப்போஸ்தலன் பேசுகிறார். கிறிஸ்தவனுக்காக அறிவு, "நித்திய அறிவும் இயேசு கிறிஸ்துவின் போதனைகளாலும் குணாதிசயத்தாலும் ஸ்தாபிக்கப்பட்டதுமான ஒரு பக்தி மார்க்கமாய் இருக்கிறது."

---

**அடிக்குறிப்பு**

[1]Everett F. Harrison, *Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 386. [2] Some of the ancient texts read "Simon" in 1:1 and others have "Simeon," but the evidence for reading "Simeon" appears to be stronger. When referring to Peter, the spelling "Simeon" occurs only here and in Acts 15:14. [3]A good presentation of the external evidence for 1 Peter can be found in J. Ramsey Michaels, *1 Peter*, Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), xxxi-xxxiv. For 2 Peter see Charles Bigg, *Epistles of St. Peter and St. Jude*, International Critical Commentary (Edinburgh: T. & T. Clark, 1902), 199–210. [4]Eusebius *Ecclesiastical History* 3.3.1, 4; 3.25.3. Eusebius himself seems to have had doubts about the letter's being genuine. [5]See Donald Guthrie, *New Testament Introduction* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1970), 671–84. Guthrie argued that while it was common practice in the New Testament period to write a document and attribute it to some famous person, it was not common to cast such a document in the form of a letter. [6]It is not clear why James comes first and Jude last. [7]Acts 15:7 is the last reference to Peter in Jerusalem. [8]For example, see Richard J. Bauckham, *Jude, 2 Peter,* Word Biblical Commentary, vol. 50 (Waco, Tex.: Word Books, 1983), 135–51. [9]Among the extensive litera-

ture on the subject, see Martin Hengel, *Judaism and Hellenis*m (Philadelphia: Fortress Press, 1974), 1:58–106. [10]Gnosticism is a complicated heresy that made inroads into many churches in the second century. Primitive forms of the doctrine appear in the letters of John and perhaps in Colossians and the Pastoral Epistles. [11]The Arian controversy of a few centuries later denied the Lord's full divinity.